போடிநாயக்கனூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளராகப் போட்டியிடும் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (30.3.2026) போடி நகரில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பசும்பொன் தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், எம்.ஜி.ஆர். உள்ளிட்ட 12 தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் பிரச்சாரத்தை தொடங்கினார். பெண்கள், பொதுமக்கள் திரண்டு வெற்றி வாழ்த்துக் கூறினர். இதில் மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி., மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# 1 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஏப். 1-

சிவகங்கை மாவட்டத்தில் இன்று முதல் 4ம் தேதி வரை நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமைக்கப்பட்டு தேர்தல் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது

இதில் முதற்கட்டமாக இன்று முதல் நான்காம் தேதி வரை தொகுதி வாரியாக சட்டமன்றத் தொகுதி வாரியாக மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டங்களில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேருர் வாயிலாக மத ச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்று கூட்டத்தினை சிறப்பாக செய்துதருமாறு

கேட்டுக்கொள்கிறேன். 1ஆம் தேதி புதன்கிழமை. காலை 9 மணி திருப்பத்தூர் வடக்கு தெற்கு திருப்பத்தூர் பேரூர், இடம், செந்தாமணி மஹால், திருப்பத்தூர், பகல் 12 மணி சிங்கம்புனரி, சிங்கம்புணரி காந்திமதி ரங்கநாதன் மாளிகை, சிங்கம்புணரி வடக்கு தெற்கு சிங்கம்புணரி பேரூர், மாலை 3 மணி லேனா மஹால் மானகிரி கல்லல்மே, ற்கு ஒன்றியம் மாலை ஐந்து மணி சாக்கோட்டை மேற்கு பள்ளத்தூர், கானாடுகாத்தான், கோட்டையூர் பேரூராட்சி. 2ம் தேதி வியாழக்கிழமை. தேதி மாலை 3 மணி, சிவகங்கை நகரம், சிவகங்கை வடக்கு தெற்கு மேற்கு ராயல் மஹால் சிவகங்கை, மாலை 5.00மணி காளையார் கோவில். ஏ.எஸ். மகால், காளையார் கோவில் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு. நாட்டரசன் கோட்டை பேருர், இரவு 7.00மணி கல்லல் கிழக்கு ஒன்றியம் 3ம்தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி எஸ் புதூர் பாரிவள்ளல் ஒன்றியம், பகல் 12 மணி திருப்புவனம் கிழக்கு மேற்கு தெற்கு திருப்புவனம் பேருர் டி.ஆர்.மஹால் திருப்புவனம். பகல் 3 மணி மானாமதுரை நகர், மேற்கு, கிழக்கு, வடக்கு ஒன்றியம், தேவர் மஹால் இளையான்குடி சாலை மாலை 5 மணி இளையான்குடி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, இளையான்குடி பேரூர், 4ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணி காரைக்குடி சட்டமன்றத் தொகுதி இடம், தேவகோட்டை நேரம், காலை 9.00 மணி சரவண மஹால் தேவகோட்டை,தேவகோட்டை நகரம் தேவகோட்டை தெற்கு வடக்கு கண்ணண்குடி ஒன்றியம், பகல் 12.00 மணி. இடம், புதுவயல் நேரம், சாக்கோட்டை கிழக்கு புதுவயல் கண்டனூர், கானாடுகாத்தான் பேரூராட்சிகள், மாலை 4.00 மணி காரைக்குடிமாநகரம். கல்லல் கிழக்கு, ஒன்றியம். அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், கழக மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் நடைபெறும் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடைபெற சிறப்பாக செய்திடுமாறு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன். தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகள் சார்பில் சரஸ்வதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர்கள் கலந்து கொண்டு பேசினர். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராமசாமி, முன்னாள் எம்.பி. லிங்கம், திராவிடக் கழகம் திருபாபதி, நல்லதம்பி, ஆதவன், புகழேந்தி, பாலகிருஷ்ணன், நகர தி.மு.க. செயலாளர் தனபால் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகள் திரளாக கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கா. கருணாநிதியை ஆதரித்து செயல்வீரர்கள் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பெ.கீதா ஜீவன், உரையாற்றினார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் பீக்கிளிபட்டி முருகேசன், ராதா கிருஷ்ணன், சுப்பிரமணியன், முன்னாள் நகர செயலாளர் ராமர், பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ் கழக பேச்சாளர் சரவெடி சரத் பாலா, தமிழ் பிரியன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழக அரசின் ஐந்தாண்டு கால சாதனைகளைப் பட்டிதொட்டி, இல்லம் தோறும் எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு

# மகளிர் அணி சார்பில் 'திராவிட மாடல்' ஆட்சி அமைய அயராது உழைப்போம்!

## கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் – மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை, ஏப். 1 -

தமிழ் நாட்டில் ஒவ்வொரு பெண்களையும் "வெல்லும் தமிழ் பெண்கள்" ஆக மாற்றிய திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள் மற்றும் பாகந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஸ்டாலினின் மகளிர் படை' இல்லம் தோறும் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்து' திராவிட மாடல் 2.0 'ஆட்சி அமைய அயராது உழைப்போம் என மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர், தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நமது முதல்வர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஓய்வின்றி உழைத்து வருகிறார் குறிப்பாக இந்திய அளவிலான பொருளாதார வளர்ச்சி குறியீட்டில் 16 சதவீதம் இந்த நாட்டின் முதன்மை மாநிலமாக உயர்ந்து நிற்கிறது.

தமிழ்நாட்டுப் பெண்கள் காவல் அதிகாரிகளாக, (Women IPS) கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம். வறுமை ஒழிப்பில் முதலிடம். இந்திய அரசியல் வரலாற்றில் மகத்தான திட்டமான குடும்ப தலைவிகளுக்கு மாதம் தோறும் ரூபாய் 1000 வழங்கும் மகளிர் உரிமை தொகை திட்டம். மாதந்தோறும் 1.31 கோடி மகளிர் பெறுவதோடு அவர்களின் சமூக பொருளாதார நிலையும் உயர்ந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணிக்கும் விடியல் பயணத்திட்டம். தமிழ்நாடு மகளிர் ஸ்டாலின் பஸ் என பேரன்போடு அழைக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரு பெண் மாதந்தோறும் 800 முதல் 1100 ரூபாய் வரை சேமிப்பதுடன் அவர்கள் சுதந்திர உணர்வும் அதிகரித்துள்ளதாக ஆய்வு கட்டுரைகள் தெரிவிக்கின்றன. அரசு வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 40 சதவீதம் ஒதுக்கீடு. நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் பெண்களுக்கு 50 சதவீதம் வேலை வாய்ப்பு. மகளிர்க்கு ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு பணி 12 மாதங்களாக உயர்வு.

இந்தியாவில் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள மொத்த பெண் தொழிலாளர்களில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 43 சதவீதம் ஆகும். காலையில் பசியோடு பள்ளிக்கு வரும் மாணவர்களை பட்டினியாக வைத்து பாடம் சொல்லித் தரக்கூடாது அவர்களுக்கு சத்தான உணவு வழங்க வேண்டும் என்ற மகத்தான எண்ணத்துடன் தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட மகத்தான திட்டமே காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் மாணவன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், உங்களுடன் ஸ்டாலின், மருத்துவத்துறை, கல்வித் துறை, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை, சமூக நீதியும் சமத்துவமும் என நமது முதலமைச்சர் அனைவருக்கும் சமம் என கிடைக்கப்பெற்று வேற்றுமைகளை கலைந்து அனைவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். அமைதி பூங்கான தமிழ்நாட்டில் மத வாத சக்திகளுக்கு இடமில்லை என்ற உறுதியுடன் நம் மாநிலத்தின் உரிமைகளை டெல்லிக்கு அடகு வைக்க துடிக்கும் அடிமைகளின் எண்ணத்தை மக்களிடம் எடுத்துரைப்போம்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு பெண்களையும் வெல்லும் தமிழ்ப் பெண்களாக மாற்றிய 'திராவிட மாடல்' அரசு மீண்டும் அமைய மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாகந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட, 'ஸ்டாலினின் மகளிர் படை' ஆகியோர் திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு கால சாதனைகளை பட்டி தொட்டி, இல்லம் தோறும் எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு மகளிர் அணி சார்பில் 'திராவிட மாடல் 2.0 'ஆட்சி அமைய அயராது உழைப்போம். "ஸ்டாலின் தொடரட்டும்" "தமிழ்நாடு வெல்லட்டும்".

இவ்வாறு கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும், திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளருமான சு.சுப்பிரமணியன் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட அவைத் தலைவர் முருகன், நெல்லை கிழக்கு மாநகரப் பொறுப்பாளர் தினேஷ், துணை மேயர் ராஜ், பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங்கர், தச்சை சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை, பொருளாளர் வண்ணை சேகர், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், கந்தன், வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். அதனைத் தொடர்ந்து பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,அண்ணல் அம்பேத்கர், வ.உ.சிதம்பரனார், அழகு முத்து கோன், ஒண்டிவீரன் ஆகியோர்களின் திருவுருவசிலைகளுக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பீமகுளம், பூங்குளம், குரிசிலாப்பட்டு, ஆலங்காயம், செக்குமேடு, ராமநாயக்கன்பேட்டை, உதயேந்திரம், வாணியம்பாடி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர்கள் ஆசி பெற்ற வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் எஸ்.எஸ்.பி.சையத் பாரூக்குவை அறிமுகம் செய்து, வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வாகை சூட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளரும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளருமான ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிவகிரியில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு, அங்கு கூடியிருந்த மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், ஒன்றியச் செயலாளர் பொன்.முத்துராமலிங்கம், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.